**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>**
**<u>முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,</u>**
**<u>முதன்மை சார்பு நீதிபதி</u>**

ம.சா. 4 தேதி.13.12.2023

| | | | |
|---|---|---|---|
| MCOP. No. | 319/2019 | | |
| பெயர் | டாக்டர். கீர்த்திவாசன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் சென்னை காவேரி மருத்துவ மனையில் உதவி அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் இருந்து வரப்பட்ட அழைப்பானையில் வழக்கில் கார்த்தி என்பவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை சம்பந்தமான மருத்துவ ஆவணங்களுடன் ஆஜராகி சாட்சியம் அளிக்க கோரப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ13 ஆவணத்தில் இருந்து 12.07.2017-ல் உள்நோயாளியாக அனுமதிக்கபட்டு 28.07.2017-ல் விடுவிக்கப்பட்டுள்ளார். எங்கள் மருத்துவ மனையில் சிகிச்சைக்கு சேர்வதற்கு முன்பாக கார்த்தி மியாட் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்திருந்தார். அவருக்கு மியாட் மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்த நிலையில் அதை மேற்கொண்டு தொடர் சிகிச்சைக்காக எங்கள் மருத்துவ மனையில் சேர்ந்தார். கார்த்திக்கு சி1 -ல் நகராத எலும்பு முறிவு, சி5-ல் நொறுங்கிய எலும்பு முறிவு, சி7-ல் எலும்பு விலகாத எலும்பு முறிவு, சி4 முதல் சி6-ல் பின்னால் ஸ்குரு பொருத்தப்பட்டு அறுவை சிகிச்சை மூலமாக நொறுங்கிய எலும்புகளை அகற்றிவிட்டு சரிசெய்யப்பட்டுள்ளது. 12.07.2017-ல் அவருக்கு தொற்று அதிகமாக இருந்தது அதனால் அவரை அவசர சிகிச்சை பிரிவில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டது. கழுத்தில் அடிப்பட்டதால் அவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டது அதற்கு சிகிச்சையும் கொடுத்தோம். இந்த விபத்தில் ஏற்பட்ட மேற்படி காயங்களால் அவருக்கு மாரடைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் காரத்திக்கு நேரடியாக சிகிச்சை அளித்த மருத்துவ அல்ல என்றால்

சரிதான். நேரடியாக சிகிச்சை அளித்த மருத்துவர் கவேரி மருத்துவ மனையில் பணியில் உள்ளார். நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். பிரதான சிகிச்சைகள் அவருக்கு மியாட் மருத்துவ மனையில் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது குறித்து எங்கள் மருத்துவ விடுவிப்பு சான்றில் உள்ள குறிப்புகளை பார்வையிட்டு தான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன். எங்கள் மருத்துவ மனையில் அவருக்கு நோய் தொற்று மற்றும் இரத்த அழுத்தம் ஆகியவற்றிக்கு மட்டும் தான் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவற்றிக்கும் விபத்து காயத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் விபத்து காயத்தினால் தான் ஏற்பட்டது. விபத்து காயங்களால் தான் அவரது இறப்பு ஏற்பட்டது என்று நான் சிகிச்சை அளிக்காத மருத்துவர் என்பதால் என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.